# மாநில அரசில் அம்னோ இல்லாவிட்டால் மலாய்க்காரர்களின் உரிமைகள் பறிபோகும்





சிரம்பான், ஜூலை 7-

விரைவில் நடைபெறவுள்ள மாநில சட்டமன்றத் தேர்தலில் நெகிரி செம்பிலானில் உள்ள மலாய்-முஸ்லிம் வாக்காளர்கள் தங்கள் ஆதரவை மீண்டும் பாரிசான் நேஷனலுக்கு அளிக்க வேண்டும் என்று முன்னாள் அம்னோ இளைஞர் பிரிவுத் தலைவர் கைரி ஜமாலுடின் வலியுறுத்தினார்.

சிரம்பானில் நேற்று முன்தினம் நடைபெற்ற அம்னோ இளைஞர், புத்ரி கூட்டத்தில் தனது தொடக்க உரையில் அம்னோ- பாரிசான் நேஷனல் கூட்டணியால் மட்டுமே மலாய்க்காரர்களின் நலன்களைப் பாதுகாக்க முடியும் என்றும் மந்திரி பெசாராக இருந்தபோது அமினுடின் ஹருன் அதைச் செய்யத் தவறிவிட்டார் என்றும் அவர் கூறினார்.

மாநில சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பக்காத்தான் ஹரப்பான் (பிஎச்) பிரதிநிதிகளின் இன அமைப்பைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 14 அம்னோ பிரதிநிதிகள் முந்தைய மாநில அரசில் அங்கம் வகித்ததால் மலாய்க்காரர்களும் முஸ்லிம்களும் அதிர்ஷ்டசாலிகள் என்று கைரி கூறினார்.

31 சட்டமன்ற உறுப்பினர்களில் நான்கு பேர் மலாய் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கும்போது அந்த அரசாங்கத்தில் யாருடைய குரல் பெரிதாக இருக்கும்?

நாங்கள் இனவெறியைப் பற்றிப் பேசவில்லை, ஆனால் நிச்சயமாக மற்ற இனப் பிரதிநிதிகள் தங்கள் இனத்திற்காகப் போராடுவார்கள். அது அவர்களின் உரிமை.

ஆனால், நமது இனப் பிரச்சினைக்காக நான்கு மலாய்க்காரர்கள் மட்டுமே போராட விரும்பினால் அந்தச் சூழ்நிலையில் அவர்களின் குரல்கள் அமுக்கப்படாமல் இருப்பது எப்படி சாத்தியமாகும்?

அதனால்தான் அதிர்ஷ்டவசமாக கடந்த தேர்தலில் நாங்கள் அவர்களுடன் சேர வேண்டியிருந்தது. நெகிரி செம்பிலானில் மலாய்க்காரர்களின் குரலுக்குக் காரணம் 14 பாரிசான் நேஷனல் சட்டமன்ற உறுப்பினர்களே என்று கைரி சுமார் 200 பேர் முன்னிலையில் கூறினார்.

முன்னாள் ரெம்பாவ் நாடாளுமன்ற உறுப்பினரான அவர், அமினுடின் அதிகாரமற்றவர் என்றும் பக்காத்தான் ஹராப்பான் கூட்டணி கட்சிகளில் அதிக இடங்களைக் கொண்டுள்ள ஜசெகவின் கட்டுப்பாட்டில் இருக்கிறார் என்றும் குற்றம் சாட்டினார். மோதலைத் தவிர்ப்பதற்காக பிஎச், பிஎன் கட்சிகள் 2023 நெகிரி செம்பிலான் மாநிலத் தேர்தலில் ஒரு தேர்தல் கூட்டணியின் கீழ் போட்டியிட்டு முறையே 17 - 14 இடங்களை வென்றன. பிஎச்-இன் 17 இடங்களில், 11 இடங்கள் ஜசெகவிடமும் ஐந்து இடங்கள் பிகேஆரிடமும் ஓர் இடம் அமானாவிடமும் உள்ளன.

கூட்டணிக் கட்சிகள் ஒன்றிணைந்து மாநில அரசை அமைத்தன. அதே நேரத்தில் பெரிக்காத்தான் நேஷனல் வெறும் ஐந்து இடங்களை மட்டுமே வென்று எதிர்க்கட்சியாகவே நீடித்தது.

குறிப்பாக மலாய்க்காரர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் லெங்கெங் தொகுதி முன்பு அமானாவின் சுஹைமி காசிம் வசம் இருந்த நிலையில் பிஎச் கட்சி பாரிசான் நேஷனலின் அஸ்னா அமினுக்கு வழிவிட்டிருந்தது.

இருப்பினும் நான்கு உண்டாங்களுக்கும் சமஸ்தானதிபதி துவாங்கு முக்ரிஸ் துவாங்கு முனாவிருக்கும் இடையே ஏற்பட்ட தகராற்றைத் தொடர்ந்து, நெகிரி செம்பிலானில் பிஎச், பிஎன் இடையேயான உறவுகள் ஏப்ரல் மாதம் மோசமடைந்தன.

இந்தப் பிரச்சினையை அமினுடின் சரியாகக் கையாளத் தவறிவிட்டார் என்று மாநில பாரிசான் நேஷனல் குற்றம் சாட்டியது. இதன் விளைவாக 14 அம்னோ சட்டமன்ற உறுப்பினர்கள் பிஎச் மந்திரி பெசாருக்கான தங்கள் ஆதரவைத் திரும்பப் பெற்றனர். இருப்பினும் பிஎச், பிஎன் கூட்டாட்சித் தலைமைகளின் தலையீட்டிற்குப் பிறகு அமினுடினைப் பதவியிலிருந்து நீக்கும் அவர்களின் முயற்சி தோல்வியடைந்தது.

மாநிலத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் திட்டத்தை பாரிசான் நேஷனல் அறிவித்திருந்த போதிலும் எந்தவொரு முடிவையும் அக்கூட்டணியின் தலைவர் அமாட் ஸாஹிட் ஹமிடியிடம் விட்டுவிடுமாறு கட்சி உறுப்பினர்களை கைரி வலியுறுத்தினார். முடிவெடுப்பது நமது வேலையல்ல. இது கீழிருந்து வரும் ஒரு பார்வை என்று நாம் கூறலாம்.

ஆனால், பெருமக்களே நாம் இணைந்தாலும் சரி, தனியாகப் போட்டியிட்டாலும் சரி, முக்கியமானது என்னவென்றால் நெகிரி செம்பிலானில் மலாய் இனத்தின் கண்ணியமும் இஸ்லாமிய மதத்தின் புனிதமும் அம்னோ-பாரிசான் நேஷனல் பலத்தில்தான் தற்காக்கப்பட்டுள்ளது.

அதனால்தான் வரவிருக்கும் தேர்தலில் நாம் இணைந்தாலும் சரி தனியாகப் போட்டியிட்டாலும் சரி இளைஞர்களின் உணர்வும் புத்ரி அம்னோ நெகிரி செம்பிலானின் உணர்வும் இருந்தால் நாம் தனியாகப் போட்டியிடுவதையே மிகவும் வசதியாக உணர்வோம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் நாம் இணைய வேண்டியிருந்தால் தலைமையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவோம்.

நாம் இணைந்தாலும் சரி தனியாகப் போட்டி யிட விரும்பினாலும் சரி நெகிரி செம்பிலானில் மலாய்க்காரர்களின் உரிமைகளும் நலன்களும் அம்னோவால் பாதுகாக்கப்படுவதை உறுதி செய் வதே நமது குறிக்கோள் என்று அவர் கூறினார்.

# இனிவரும் காலங்களின் தங்கத்தின் விலை உயரும்; தங்கத்தை சேமிப்போம்

## -டத்தோஸ்ரீ லூயிஸ் இங்

● சண்முகம் செல்வம்



கோலாலம்பூர், ஜூலை 7-

தென்கிழக்கு ஆசியாவின் முன்னணி மதிப்புமிக்க தங்க வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான பப்ளிக் கோல்டு மலேசியா (Public Gold) அனைத்துலக வர்த்தக, கண்காட்சி மையத்தில் தனது வரலாற்றில் மிகப்பெரிய அங்கீகார விருது விழாவை நடத்தியது. நிதியாண்டில் சிறப்பான சாதனைகளைப் படைத்தவர்களைக் கௌரவிக்கும் இந்த விழாவில் 3,200-க்கும் மேற்பட்ட பப்ளிக் கோல்டு வணிக உரிமையாளர்கள் (PGBOs) ஒன்றிணைந்தனர்.




பப்ளிக் கோல்டு நிறுவனத்தில் வாடிக்கையாளர்கள் தங்கள் சேமிப்பைத் தங்கமாக வைத்திருப்பதை தாம் வரவேற்பதாக டத்தோஸ்ரீ லூயிஸ் இங் கூறினார்.

ஏனெனில் இந்த உலகில் தங்கத்தின் விலை பல மடங்கு அளவுக்கு அதிகமாக இருக்கிறது. பணத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உலகில் உள்ள ஒவ்வொரு வங்கியும் ஒவ்வொரு வருடமும் சந்தை பயன்பாட்டிற்காக அதிகப் பணத்தை அச்சிட்டுக் கொண்டே இருக்கின்றன. எனவே இனி வருங்காலத்தில் தங்கத்தின் விலை இன்னும் நிச்சயம் உயரும் என லூயிஸ் இங் தெரிவித்தார். தற்போதைய வங்கி முறைமைகளில் பயன்படுத்தப்படும் பணத்தின் மதிப்போடு ஒப்பிடும்போது இதுதான் நடக்கும்.



தங்கத்தின் முக்கியத்துவம் என்னவென்றால் பணவீக்கத்திற்கு எதிரான ஒரு சமநிலையாகும். 30 வருடங்களுக்கு முன்பு நம் நாட்டின் தங்க விலை ஒரு கிராமுக்கு வெறும் 30 மலேசிய ரிங்கிட்டாக இருந்திருக்கலாம். ஆனால், இன்று 1 கிராம் 600 ரிங்கிட்டாக எட்டிருக்கிறது. இது 30 வருடங்களுக்கு முன்பிருந்த விலையை விட 20 மடங்கு அதிகம் என பத்திரிகையாளர் கூட்டத்தில் அவர் சொன்னார்.

இன்னும் வரும் காலங்களில் தங்கத்தின் விலை நிச்சயம் உயரும் என்று உறுதியளிக்கிறேன். இது நிலம் அல்லது நம் வீடுகள் போன்ற மற்ற சொத்துகளைப் போன்றதுதான். அவையும் விநியோகம் வரம்புக்குட்பட்ட சொத்தாகும். எனவே எப்போதும் எல்லையின்றி அச்சிடப்படும் பணத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வரம்புக்குட்பட்ட இந்தச் சொத்துக்களின் விலை நீண்ட காலத்தில் நிச்சயம் உயரும். அதனால் பணவீக்கத்திற்கு எதிரான ஒரு மிகச்சிறந்த அரணாக இந்தத் தங்கம் விளங்குகிறது எனவும் அவர் கோடிக்காட்டினார்.

கடந்த ஆண்டு 5 பேர். இந்த ஆண்டு 14 பேர் கடந்த ஆண்டு 4 மலேசிய இந்தியர்கள் கேப் டவுன் சென்றனர். இந்த ஆண்டு நமது சொகுசு கப்பல் பயணத்திற்கு 14 இந்தியர்கள் தகுதி பெற்றுள்ளனர். இது ஓர் அசாதாரண சாதனை. இப்போது மலேசியாவில் உள்ள இந்தியர்கள் வெற்றிகரமாக பப்ளிக் கோல்டு நிறுவனத்திற்குள் நுழைந்துள்ளனர். இந்த வேகம் தொடரும் என்று நான் நம்புகிறேன், அடுத்த ஆண்டு இன்னும் பல இந்தியர்கள் தகுதி பெறுவார்கள் என்று தாம் நம்புவதாக மேலும் அவர் குறிப்பிட்டார்.

அதுமட்டுமன்றி இந்த ஆண்டின் தொடக்கத்தில் பப்ளிக் கோல்டு நிறுவனம் மலேசியா, இந்தோனேசியா, துபாய் ஆகிய நாடுகள் முழுவதும் சுமார் 161 தங்க ஏடிஎம்-களை நிறுவி அதிகப்படியான தங்க ஏடிஎம்-களைக் கொண்டுள்ள நிறுவனம் என்ற கின்னஸ் உலக சாதனை அங்கீகாரத்தைப் பெற்றதுள்ளது. இது இந்த நிறுவனத்தின் தொடர்ச்சியாக தங்கத்தை மக்கள் எளிதில் வாங்குவதற்கான தொடர் முயற்சியாகும் என்றார் அவர்.

இந்த விழாவின் மற்றொரு முக்கிய அங்கமாக மலாயன் டைகர் கோல்டு காயின் (Malayan Tiger Gold Coin) அறிமுகப்படுத்தப்பட்டது. இது உலகளவில் வெறும் 1,000 காசுகள் மட்டுமே அச்சிடப்பட்ட, ஒரு பவுன்ஸ் எடை கொண்ட 999.9 தூய தங்க நாணயத்தின் வரையறுக்கப்பட்ட பதிப்பாகும் (Limited Edition). மலேசியாவின் தேசிய அடையாளமான மலாயா புலியின் சாயலில் ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்த நாணயம் வலிமை, தைரியம், நீடித்த செழிப்பைக் குறிக்கிறது எனவும் மேலும் அவர் குறிப்பிட்டார்.


## பல வருட கால் வலிக்கு கிடைத்த நிவாரணம் VNET LIFE OIL

நான் புனிதா, வயது 58. கடந்த 5 ஆண்டுகளாக கால் மூட்டு பாத இடுப்பு மற்றும் நரம்பு வலி காரணமாக என் வாழ்க்கையே மாறிப் போயிருந்தது. காலை எழுந்தவுடன் கால்களை தரையில் வைக்கவே முடியாது. சிறிது நேரம் நடந்தாலே முழங்காலில் கடும் வலி. வீட்டில் சாதாரண வேலை செய்வதற்குக் கூட இடையில் அமர்ந்து ஓய்வு எடுக்க வேண்டிய நிலை.



அப்படித்தான் ஒரு நாள் செய்தித்தாளில் “VNET LIFE OIL” பற்றிய தகவலை பார்த்தேன். பலர் பயன்படுத்தி நல்லபலன் பெற்றதாக இருந்ததால் நானும் முயற்சி செய்து பார்க்க முடிவு செய்தேன்.

VNET LIFE OIL பயன்படுத்திய சில நாட்களிலேயே உடலில் நல்ல மாற்றம் தெரிந்தது. கால்களில் இருந்த கனத்த உணர்வு குறைந்தது. முழங்காலில் இருந்த வலி மெதுவாக குறைந்து, முன்பை விட சுலபமாக நடக்க ஆரம்பித்தேன்.

தொடர்ந்து பயன்படுத்தியபோது நரம்பு வலி கூட குறைந்து உடலில் புத்துணர்ச்சி கிடைத்தது. இரவில் வலியால் தூங்க முடியாமல் இருந்த நான், இப்போது நிம்மதியாக உறங்குகிறேன். அதிசயம் போல் உணர்கிறேன் ஆனால், முற்றிலும் உண்மை!

ஏறக்குறைய 2 மாதத்தில், இன்று நான் மீண்டும் என் பழைய வாழ்க்கைக்குத் திரும்பியிருக்கிறேன். வீட்டுப் பணிகள், கோவில் செல்வது, சந்தைக்கு நடந்து செல்வது போன்ற அனைத்தையும் சிரமமின்றி செய்து வருகிறேன்.

பல வருடங்களாக வலியால் அவதிப்படுபவர்கள் ஒருமுறை “VNET LIFE OIL” பயன்படுத்திப் பாருங்கள். என் வாழ்க்கையை மாற்றிய இந்த அற்புதமான எண்ணெய், உங்களுக்கும் நல்ல நிவாரணம் தரும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

### LIFE OIL நன்மைகள்

- கால் மூட்டு, பாத மற்றும் இடுப்பு வலியை வெகுவாக குறைக்கும்.
- நரம்பு இழுக்கும் வலியை குறைக்கும்.
- கால் வீக்கத்தை குறைத்து ரத்த ஓட்டத்தை சீராக்கும்.
- தசை பிடிப்பு மற்றும் இறுக்கத்தை வெகுவாக குறைக்கும்.
- ஆர்ட்டிரைதிஸ் மற்றும் கவுட் வலிகளுக்கு சிறந்த நிவாரணம் தருகிறது.




010 918 1673

VNET INTERNATIONAL SDN BHD
MENARA KLH BUSINESS CENTRE,
02-07-12, JALAN KASIPILLAY,
51200 KUALA LUMPUR